பேச்சிப்பாறை அணை.

83—(*வினா எண் 12428)—திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு சரி செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் இத்திட்டம் நிறைவேறுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேச்சிப் பாறை அணையை நம்பித் தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக் கூடிய விவசாய மக்கள் இருந்து வருகிறார்கள். அணையின் அடி மட்ட அளவிற்குக் கீழே சுமார் 42 அடி தண்ணீர் எப்போதும் தேங்கி இருக்க வேண்டும். ஆனால் தற்போது மணலும் சேரும் சகதியும் தான் நிரம்பி இருக்கிற காரணத்தால் அணையின் கொள்ளளவு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதன் மீது தனிக் கவனம் செலுத்தி பேச்சிப் பாறை அணையினுடைய கொள்ளளவை அதிகரிக்கின்ற வகையில் கோடை காலத்திலாவது பொது மக்களே தூர் எடுத்துக் கொள்ளலாம் என்று, அரசினுடைய நிதிநிலை பாதிக்காமல், உத்தரவிட அமைச்சர் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணையினுடைய கொள்ளளவு 1963 ஆம் ஆண்டு, நீர் மட்டத்தில் 6 அடி உயரத்தில் 3509 மில்லியன் கன அடியாக இருந்தது, 4350 மில்லியன் கன அடியாக தற்போது அதிகரித்து உள்ளது. இந்த அணையைப் பொறுத்த அளவில் கீழ்ப்பகுதியில் தொடர்ந்து தண்ணீர் நின்று கொண்டிருக்க வேண்டும். அந்த தண்ணீரை வெளியேற்ற வேண்டும். வெளியேற்றியதற்குப் பிறகுதான் தூர் வார முடியும். ஆகவே அரசு கொள்கை ரீதியில் ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கும்.